முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்ட நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.03.2023**, சனிக்கிழமை

1. வானவர் போற்றும் ஞானியே
வள்ளலே மாதவ யோகியே
தானதரும வழிமுறைகள் தனை
தரணியில் வளர்க்கும் தவசியே
2. தவசியே அரங்கமகா ராசனே
தானுன் பெருமை கூறியே
அவனியில் சுபகிருது சால் திங்கள்
அறிவிக்க இருபானேழ் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 27 ம் நாள், 11.03.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் அனுகூல ஆசியை
வழங்குவேன் திருநீலகண்ட நாயனாரும்
சோரமிலா ஞானவான்கள்தனை
சுத்தநெறி கொண்டு படைத்துவரும்
4. வருகின்ற அரங்கன் மார்க்கமே
வையகம் காக்கின்ற மார்க்கம்
தருகின்ற தயவுதனை வளர்த்து
தானதருமம் செய்ய வைத்து
5. வைத்துமே அவரவர் வினையை
வலுவிழக்கச் செய்து விரட்டும்
உத்தம ஞானி அரங்கமகானே
உலகை மாற்றும் ஞானியாகும்
6. ஆகவே அரங்கன் வாழ்
ஆற்றல்மிக்க பிரணவக் குடிலை
மிகைபட அணுகித் தொடர்ந்து
முழுமை தரும் அரங்கனின் தீட்சை
7. தீட்சை அடைந்து மக்கள்
தேடும் ஞான வழிகளை
தட்டாது சரவணச் சுடரின்வழி
தவமாக்கி வணங்கிவர
8. வருகவே நல்வினை பெருகி
வளமும் அருள் ஞானபலமும்
முருகப்பெருமானே தலைவனென
முழுமையான சரணாகதி பெருக
9. பெருகவே கோளிடர் குற்றமே
பேரிடர் அல்லலோ அனுகா
பெரும் பாதுகாப்பாக மாறி
பேருலகில் ஞானவான்கள் ஆவர்

10. ஆவரே அரங்கன் தேற்றும்
ஆற்றல்மிக்க ஞானிகளாக
அவதாரம் அவரவரும் அடைந்துமே
அகிலம்தனை மாற்றும் மகா சக்திகளாக

11. ஆகவே ஞானவான்கள் தலைமை
ஆளுமைதனை கொண்ட வண்ணம்
வகையாக்கி ஞான ஆட்சிபடைப்பர்
வழங்கிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–